







கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கழகக் கொள்கைப் பரப்புத் துணைச் செயலாளர் பொன்னேரி வழக்கறிஞர் வெ.அன்புவாணன் சந்தித்து, முரசொலியில், தாம் 100 கட்டுரைகள் எழுதியதைத் தொடர்ந்து வாழ்த்துக்கள் பெற்றார்.

### முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்தநாளை முன்னிட்டு

# பள்ளி - கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.10-

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021 - 2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவரான ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் பேச்சுப் போட்டி 12.11.2024 அன்று பள்ளி மாணவர்களுக்கு வடசென்னை அளவில் வில்லிவாக்கம் அரசு மேனிலைப்பள்ளியிலும், தென் சென்னை அளவில் நந்தனம் அரசு மாதிரி மேனிலைப்பள்ளியிலும், மத்திய சென்னை அளவில் திருவல்லிக்கேணி சீமாட்டி விலிங்டன் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளியிலும் முற்பகல் 09.00 மணி அளவில் சென்னை மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

13.11.2024 அன்று கல்லூரி மாணவர்களுக்கு வடசென்னை அளவில் ஆர்.கே.நகர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், மத்திய சென்னை அளவில் சேப்பாக்கம் மாநிலக் கல்லூரியிலும், தென்சென்னை அளவில் இராணி மேரி கல்லூரியிலும் முற்பகல் 09.00 மணி அளவில் சென்னை மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

பேச்சுப்போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/, மூன்றாம் பரிசு ரூ.2000/ மேலும் அரசுப் பள்ளிகளில் பயிலும் இரு மாணவர்களுக்கு சிறப்புப் பரிசாக தலா ரூ.2000/ மற்றும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர். கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/, மூன்றாம் பரிசு ரூ.2000/ மற்றும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர்.

ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் பேச்சுப்போட்டியில் பள்ளி மாணவர்களுக்கான தலைப்புகள் விவரம் முறையே, பின்வருமாறு 1. அமைதிப் புறா நேரு 2. நவீன இந்தியாவின் சிற்பி 3. ஆசிய ஜோதி.

ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் பேச்சுப்போட்டியில் கல்லூரி மாணவர்களுக்கான தலைப்புகள் விவரம் முறையே, பின்வருமாறு 1. நேருவின் வெளியுறவுக் கொள்கை 2. நேரு கட்டமைத்த இந்தியா 3. நேருவின் பஞ்சசீலக் கொள்கை.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




### ஊரகப் பகுதி அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு

# திட்டச் செயலாக்கம் குறித்த - ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி!

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்துகிறது!

சென்னை, நவ.10-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 27.06.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் "ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் திட்ட செயலாக்கம் குறித்து ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்" என்று அறிவித்திருந்தார்.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள 3,29,039 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 39,48,468 உறுப்பினர்களுக்கு ரூ. 30 கோடி மதிப்பீட்டில், நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைத்துவம் குறித்து ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்த முடிவு செய்து, தேவையான நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இப்புத்தாக்கப் பயிற்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுநிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும், வாழ்வாதார மேம்பாடு, பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள், திறன் பயிற்சிகள், வங்கிக் கடன் இணைப்புகள், பாலின விழிப்புணர்வு, சுய தொழில் மேம்பாடு, பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவற்றில் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மேலும், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விபரங்களை கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களிடையே கொண்டு சேர்ப்பது குறித்தும் இப்பயிற்சியில் உரிய வழிமுறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்த புத்தாக்கப் பயிற்சியில் பங்கெடுப்பதின் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமும், செயல்பாடும் மேம்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறப்புகள் நிறைந்த புத்தாக்கப் பயிற்சியானது, மூன்று குழுக்களுக்கு ஒரு அணி என்ற வகையில் (36 நபர்கள்) 1,09,678 அணிகளைச் (Batches) சார்ந்த 39,48,468 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, அந்தந்த ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டிடங்களில் நடைபெற்று வருகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு வரும் புத்தாக்கப் பயிற்சியினை 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்திட அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.